Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

ஏதேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளி

1. **(i) தயாரிப்பு மேலாளர் :**
பல்லூடக உருவாக்குதலில், குறித்த நேரத்தில் முழு தரத்துடன் பல்லூடக திட்ட உருவாக்கத்தை வரையறுப்பது மற்றும் ஒருங்கிணைப்பது தயாரிப்பு மேலாளரின் பங்கு ஆகும். தயாரிப்பு மேலாளர் என்பவர் தொழில்நுட்ப திறன்கள், நன்கு திட்டம் வரைதல், கலந்துரையாடல் திறன்கள் மற்றும் வரவு - செலவு மேலாண்மை திறன்கள் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
(ii) பொருளடக்க வல்லுநர் :
பொருளடக்க வல்லுநர் என்பவர் ஏற்கனவே திட்டமிடப்பட்ட பயன்பாட்டின் பொருளடக்கத்தைப் பற்றிய அனைத்து ஆராய்ச்சி செயல்பாடுகளையும் செய்வதற்கு பொறுப்பானவர் ஆவார்.
(iii) ஸ்கிரிப்ட் எழுத்தாளர் :
ஸ்கிரிப்ட் எழுத்தாளர் கருத்துருக்களை முப்பரிமாண சூழல்களில் காட்சிப்படுத்துகிறார். தேவை ஏற்படின், நிரல் மீது மெய்நிகர் உண்மை ஒருங்கிணைப்பைப் பயன்படுத்தலாம்.
(iv) உரை பதிப்பாளர் (Text Editor):
பல்லூடக உருவாக்குதலின் பொருளடக்கம் எப்பொழுதும் தருக்கரீதியான ஓட்டமாக இருத்தல் வேண்டும். உரை எப்பொழுதும் கட்டமைப்பாகவும் சரியான இலக்கணத்தோடும் இருக்க வேண்டும். உரை மற்றும் விவரித்தல் பயன்பாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.
(v) பல்லூடக வடிவமைப்பாளர் :
பல்லூடக வடிவமைப்பாளர் பல்லூடகத்தின் அனைத்து அடிப்படைத் தொகுதிகளான வரைகலை, உரை, ஒலி, இசை, ஒளிக்காட்சி, புகைப்படம் மற்றும் படைப்பாக்க மென்பொருளைப் பயன்படுத்தி அசைவூட்டல் போன்றவற்றை ஒருங்கிணைப்பார்.
(vi) கணினி வரைகலைக் கலைஞர் :
நிரலின் வரைகலை கூறுகளான பின்னணி, புல்லட்கள், பொத்தான்கள், பாடப்பதிப்பாய்வு, 3-D பொருள்கள், அசைவூட்டல் மற்றும் சின்னங்கள் ஆகியவற்றைக் கையாளும் பங்கினை கணினி வரைகலை கலைஞர் வகிக்கிறார்.
(vii) ஒலி மற்றும் ஒளிக்காட்சி வல்லுநர்:
எடுத்துரைத்தல் மற்றும் சேமிக்கப்பட்ட ஒளிக்காட்சிகளைப் பல்லூடக நிகழ்த்துதலில் கையாளத் தேவைப்படுபவரே ஒலி மற்றும் ஒளிக்காட்சி வல்லுநர் ஆவார். பதிவு செய்தல், ஒலி விளைவுகளை பதிப்பாய்வு செய்தல் மற்றும் இலக்கமாக்கல் ஆகியவற்றுக்கு இவரே பொறுப்பானவர் ஆவர்.

2. பல்லூடக தரவுகளை உருவாக்கி, அதனை வழங்குவதற்கு பயன்படுத்தப்படும் நடப்பு கோப்பு வடிவங்களின் விளக்கம் பின்வருமாறு:
உரை வடிவங்கள் :
(i) RTF முதன்மை கோப்பு வடிவம் RTF (Rich Text Format) மைக்ரோசாப்ட் நிறுவனத்தால் 1987ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட தயாரிப்புகளின் குறிப்புகள் மற்றும் குறுக்கு பணித்தள ஆவணங்களின் பரிமாற்றங்களோடு அறிமுகப்படுத்தப்பட்டது.
(ii) Plain Text கோப்புகளை பல உரை பதிப்பான்களில் திறக்கலாம். படிக்கலாம் மற்றும் பதிப்பாய்வு செய்யலாம். Notepad (Windows), Gedit (அல்லது) nano (UNIX, Linux) TextEdit (Mac Os) போன்றவை பொதுவாக பயன்படுகிறது.
நிழற்பட வடிவங்கள் :
(i) TIFF (Tagged Image File format): கணிப்பொறி பதிப்பக உலகில் (அதிக தரமான வெளியீடு பொதுவானது ஆகும். இது பெரும்பாலும் அனைத்து மென்பொருள் தொகுப்புகளை ஆதரிக்கிறது.
(ii) BMP (Bitmap) : தொடக்கத்தில் இந்த வடிவமானது விண்டோஸ் 3.1-ல் பயன்படுத்தப்பட்டது. இது மிகவும் பெரியது மற்றும் குறுக்கமற்றது.
(iii) DIB (Device Independent Bitmap) : BMP-யை ஒத்ததாகும். இது கோப்புகளை பல்வேறு சாதனங்களில் காண்பிக்க அனுமதிக்கிறது.
(iv) GIF (Graphics Interchange Format): GIF என்பது குறுக்கப்பட்ட நிழற்பட வடிவமாகும். பெரும்பாலான கணினி வண்ண நிழற்படங்கள் மற்றும் பின்னணிகள் GIF கோப்புகளாகும். குறைந்த அளவு வண்ணங்களைப் பயன்படுத்தும் வரைகலைக்கு இந்த கோப்பு வடிவம் மிகச்சிறந்த பொருத்தமாகும்.
(v) JPEG (Joint Photographic Experts Group): JPEG ஒரு பொதுவாக பயன்படுத்தப்படும் முறை ஆகும். இது இழப்புடைய குறுக்க நுட்பத்தைப் பயன்படுத்துகிறது. நிழற்படத்தை மீண்டும் கட்டமைக்கத் தேவைப்படும் தரவுகளில் சிலவற்றை இழப்பதே, இழப்புடைய குறுக்கமாகும்.
(vi) TGA (Targa) : இது அதிக தெளிவுத்திறன் நிழற்படங்களுக்கான முதல் பிரபலமான வடிவமாகும். TGA-கோப்புகள் பொதுவாக அசைவூட்டல் ஒளி தொழில்துறையில் பயன்படுகிறது.
(vii) PNG (Portable Network Graphics) : குறைந்த இழப்பு, சிறியது மற்றும் நன்கு குறுக்கப்பட்டு ராஸ்டர் நிழற்படங்களாக சேமிக்கப்படும் ஒரு நீட்டிப்பு கோப்பு வடிவமாகும். இது GIF-க்கு மாற்றாக செயல்படுகிறது.
இலக்க ஒலி கோப்பு வடிவங்கள்:
(i) WAV (Waveform Audio File Format): விண்டோஸில் குறுக்கப்படாத ஒலி கோப்புகளைச் சேமிக்கும் மிகவும் பிரபலமான ஒலி கோப்பு வடிவமாகும். குறைக்கப்பட்ட கோப்பின் அளவைப் பெறுவதற்காக MP3 போன்ற மற்ற கோப்பு வடிவங்களுக்கு மாற்றி அமைக்க முடியும்.
(ii) MP3 (MPEG layer 3 Format) சேமிக்கவும் பதிவிறக்கம் செய்யவும் மிகவும் பிரபலமான வடிவம் MPEG Layer-3 வடிவமாகும்.
(iii) OGG : சிறந்த ஓட்டத்தினை அடைவதற்காக வடிவமைக்கப்பட்ட இலவச திறந்த மூல கொள்கலன் (Container) வடிவமாகும்

3. பல்லூடகத்தை உருவாக்கத்திற்கு போதுமான நேரம் மற்றும் திறமையான திட்டமிடல் ஆகியவை தேவைப்படுகின்றன மற்றும் திறமையான திட்டமிடல் ஆகியவை தேவைப்படுகின்றன. இது திட்டப்பணி சுமுகமாக தொடரவும் மற்றும் தகவல் இலக்கு பார்வையாளர்களைச் சென்றடையவும் உறுதி செய்கிறது. சிக்கலான பல்லூடகத் திட்டங்களை உருவாக்குவதற்கான படிநிலைகள்.
1. கருத்துரு பகுப்பாய்வு மற்றும் திட்டமிடல் :
கருத்துரு பகுப்பாய்வு பொருத்தமான கருப்பொருள். வரவு-செலவு திட்டம் மற்றும் தேர்வு செய்த கருப்பொருளின் பொருளடக்கத்தின் இருப்பு ஆகியவற்றை அடையாளம் காண்கின்றது. கூடுதலாக பதிப்புரிமை பிரச்சனைகளையும் இந்த படிநிலையில் கருத்தில் கொள்ளப்படுகிறது.
2. திட்ட வடிவமைப்பு :

ஒருமுறை கருப்பொருளை இறுதி செய்தபிறகு, பல்லூடகத்தின் திட்டத்திற்கான நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் செயல்பாடுகள் ஆகியவை வடிவமைக்கப்படுகின்றன. நோக்கத்தை செயல்படுத்துவதற்குத் தொடர்ச்சியான செயல்களை நிகழ்த்துவதைச் செயல்பாடுகள் என்கிறோம். இந்த செயல்பாடுகள், திட்ட வடிவமைப்பு படிநிலைக்கு பங்களிப்பை வழங்குகிறது.

3. முன்-உருவாக்குதல் :

திட்டமிடல் மற்றும் வடிவமைத்தலின் அடிப்படையில் திட்டத்தை உருவாக்குவது தேவையானது ஆகும்.

முன் உருவாக்குதலின் படிநிலைகள் பின்வருமாறு:

1. வரவு-செலவு திட்டமிடல் :

ஆலோசகர்கள், வன்பொருள், மென்பொருள், பயணம், தகவல் தொடர்பு மற்றும் பிரசுரித்தல் போன்ற ஒவ்வொரு நிலையிலும் அனைத்து பல்லூடக திட்டங்களுக்கும் வரவு - செலவு திட்டம் தோராயமாகக் கணக்கிடப்படுகிறது.

2. பல்லூடகத்தை உருவாக்கும் குழு :

உயர்ந்த பல்லூடகத் திட்டத்தை உருவாக்கும் குழுவிற்கு அந்த குழுவின் ஒட்டு மொத்த முயற்சி தேவை. இந்த குழுவானது ஸ்கிரிப்ட் எழுத்தாளர், தயாரிப்பு மேலாளர், பதிப்பாசிரியர், வரைகலை வடிவமைப்பாளர் மற்றும் வரை வல்லுநர் போன்ற பல்வேறு பதவிகளையும் மற்றும் பொறுப்புகளையும் செய்யும் உறுப்பினர்களைக் கொண்டது.

3. வன்பொருள்/மென்பொருள் தேர்ந்தெடுத்தல் :

பயன்பாட்டினை உருவாக்குவதற்கும் அதனை மீண்டும் செயல்படுத்துவதற்கும் பொருத்தமான கருவிகள் அனைத்து பல்லூடக பயன்பாடுகளுக்கும் தேவை. வன்பொருளானது தேர்ந்தெடுத்த வேகமான மையச் செயலகம் மற்றும் பெரிய திரையகம் பதிவுகளைச் சேமிக்கத் தேவையான வட்டுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. பொருத்தமான மென்பொருள் மற்றும் கோப்பு வடிவங்களைத் தேர்ந்தெடுத்தல் என்பது உருவாக்கப்படும் திட்டப் பணிக்கு கிடைக்கும் நிதியைப் பொறுத்ததாகும்.

4. பொருளடக்கத்தை வரையறுத்தல் :

பொருளடக்கம் என்பது பொருளடக்க வல்லுநரால் பல்லூடக வடிவமைப்பாளருக்கு வழங்கப்படும் தகவல்கள் ஆகும். இந்த தகவல்களைக் கொண்டு உருவாக்கிய பயன்பாட்டில் பல்லூடக வடிவமைப்பாளர் விவரித்தல், புல்லட்கள், வரைபடங்கள் மற்றும் அட்டவணைகள் போன்றவற்றைத் தயார் செய்கிறார்.

5. கட்டமைப்பை தயார் செய்தல் :

விரிவான கட்டமைப்பில் அனைத்து படிநிலைகளும் அடுத்தடுத்து வரும் செயல்பாட்டிற்கான நேர அளவு பற்றிய தகவல்களைக் கண்டிப்பாக கொண்டிருக்க வேண்டும். இந்த கட்டமைப்புச் செயல்பாடுகள் ஒவ்வொரு செயல்பாட்டிற்கான பொறுப்பாளர் மற்றும் ஒவ்வொரு செயல்பாட்டிற்கானத் தொடக்க/முடிவு நேரம் ஆகியவற்றை வரையறுக்கிறது. பல்லூடகப் பயன்பாட்டில் முன்-உருவாக்குதல் செயல்பாட்டிற்குப் பிறகு இந்தப் படிநிலை தொடங்குகிறது.

6. உருவாக்குதல் :

இது பின்னணி இசையைத் தேர்ந்தெடுத்தல், ஒலிப்பதிவு போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கியது. OCR மென்பொருளைக் கொண்டு உரையானது இணைக்கப்படுகிறது. படங்கள் இலக்கக் கேமராவைக் கொண்டு பிடம் பிடிக்கப்படுகிறது. ஒளிக்காட்சியினை பதிவு செய்து, தொகுத்து மற்றும் குறுக்கப்படுகிறது. இப்பொழுது மாதிரி திட்டம் தயார் நிலையில் உள்ளது.

7. சோதித்தல் :

திட்டத்தை பிரம்மாண்டமான உருவாக்கத்திற்கு முன், மாதிரி திட்டத்தை முழுவதுமாக சோதித்தல் வேண்டும். இவை அனைத்தும் சரியான இடத்தில் உள்ளதா என்பதை உறுதி செய்வதன் மூலம் வெளியீட்டிற்கு பிறகு நேர்க்கூடிய தோல்வியைத் தவிர்க்க முடியும். Internet Explorer சோதனை செயல்பாடுகள் முடிந்த பிறகு, திட்டமானது சரியாக உரிந்துரைக்கப்பட்டுள்ள மாற்றங்களோடு இணைக்கப்படுகிறது.

ஏதேனும் 6 வினாக்களுக்கு மட்டும் விடையளி

4. 1. TIFF (Tagged Image File Format)
   2. BMP (Bitmap)
   3. DIB (Device Independent Bitmap)
   4. GIF (Graphics Interchange Format)
   5. JPEG (Joint Photographic Experts Group)
   6. TGA (Targa)
   7. PNG (Portable Network Graphics).
5. 1. Wav (Waveform Audio File format)
   2. MP3 (MPEG Layer-3 format)
   3. OGG
   4. AIFF (Audio Interchange File Format)
   5. WMA (Windows Media Audio)
   6. RA (Real Audio Format).
6. 1. AVI (Audio Video Interleave)
   2. MPEG (Moving Pictures Experts Group)
7. 1. பல்லூடகம் 5 முக்கியக் கூறுகளைக் கொண்டுள்ளது. அவை
   (i) உரை
   (ii) நிழற்படம்
   (iii) ஒலி
   (iv) ஒளிக்காட்சி
   (v) அசைவூட்டல்

உரை :

பல்லூடகத்தின் அடிப்படை கூறு. இது தொடர்பிற்கான மிகவும் பொதுவான வழி ஆகும்.

நிழற்படம் :

பல்லூடகத்தின் முக்கியக் கூறாகச் செயல்படுகிறது.

ஒலி :

எந்த மொழியிலும் உள்ள அர்த்தமுள்ள பேச்சு ஆகும். இசையின் இன்பம், சிறப்பு விளைவுகள் போன்றவற்றை வழங்கும் முக்கியமானக் கூறு.

ஒளிக்காட்சி :

பல்லூடகப் பயன்பாடுகளில் தகவலைத் தெரிவிக்க, சக்தி வாய்ந்த வழி ஆகும். இது பதிவு செய்யப்பட்ட நிகழ்வு, காட்சி போன்றவற்றைப் காண்பித்தால் ஆகும்.

அசைவூட்டல் :
அசையா நிழற்படங்களை மிக விரைவாகப் காட்சிப்படுத்தும் செயலாகும்.

8. அசைவூட்டலில், திரை பொருள் என்பது ஒரு வெக்டர் படமாகும்.
(i) எண் மாற்றத்தைப் பயன்படுத்தி ஒருங்கிணைப்புகளை வரையறுக்க படத்துடன் அதன் பாதையின் இயக்கம் கணக்கிடப்படும்.
(ii) குறைந்தபட்ச சட்டக விகிதம் விநாடிக்கு 16 சட்டங்கள் என இருந்தால் மென்மையான தோற்றத்தைக் கொடுக்கும்.
(iii) இயற்கை தோற்றத்திற்கு குறைந்தபட்சம் விநாடிக்கு 25 சட்டகங்களாக இருத்தல் வேண்டும்.
தொழில்நுட்பம் :
(i) அசைவூட்டல் இரு அல்லது முப்பரிமாணங்களைக் கொண்டது.
(ii) திரையில் X, மற்றும் Y அச்சுகளுக்கு இடையேயான பரப்பில் இரு பரிமாண அசைவூட்டல் நிழற்படத்தை உயிரோட்டமாகக் கொண்டு வருகிறது.
(iii) முப்பரிமாண அசைவூட்டத்தில் X, Y மற்றும் Z ஆகிய மூன்று அச்சுகளுக்கிடையே உயிரோட்டம் நடைபெறுகிறது.
(iv) அசைவூட்டல் கருவிகள் மிகவும் சக்தி வாய்ந்தவை ஆகும். இரண்டு வகையான அசைவூட்டல்களாவன:
1. பாதை அசைவூட்டல்
2. சட்டக அசைவூட்டல்
1. பாதை அசைவூட்டல் :
மாறாத பின்னணியைக் கொண்ட திரையில் ஒரு பொருளை நகர்த்துவதை உள்ளடக்கியது.
2. சட்டக அசைவூட்டல் :
பல பொருட்கள் ஒரே சமயத்தில் நகர்வதற்கு அனுமதிக்கிறது மற்றும் பின்னணி அல்லது பொருள்களும் மாறுகிறது.

9. 1. மாதிரி ஒலி என்பது இலக்க ஒலியாகும்.
2. மாதிரி ஒலியை எடுத்து. ஒவ்வொரு n^{th} நொடிப் பொழுதையும் பிட் மற்றும் பைட்டுகளில் இலக்கத் தகவல்களாகச் சேமிக்கப்படுகிறது.
3. இந்த பதிவு செய்தலின் தரம், மாதிரி விகிதத்தைப் பொறுத்து அமையும்.
4. எத்தனை முறை மாதிரிகள் எடுக்கப்படுகின்றன மற்றும் ஒவ்வொரு மாதிரியின் (பிட், ஆழம், தெளிவுத்திறன், மாதிரி அளவு) மதிப்பையும் குறிப்பிட எத்தனை எண்கள் பயன்படுகின்றன என்பதன் மூலம் மாதிரி விகிதம் வரையறுக்கப்படுகிறது.
5. அடிக்கடி மாதிரியினை எடுத்தும் அந்த மாதிரியைப் பற்றிய அதிக தரவுகளைச் சேமிக்கும் பொழுதும், பதிவு செய்யப்பட்ட ஒலியின் சிறந்த தரம் மற்றும் தெரிவுத்திறன் ஆகியவற்றை மீண்டும் ஒலிக்கச் செய்யும் பொழுது பெறப்படுகிறது.

10. 1. MPEG என்பது இலக்க ஒளிக்காட்சி மற்றும் ஒலி குறுக்கத்தை ISO குழுவினரால் உருவாக்கப்படும் ஒரு தர நிலை ஆகும்.
இந்த குழுவினர் உருவாக்கியவை :
1. MPEG-1 : ஒளிக்காட்சி CD மற்றும் MP3 ஆகியவற்றிற்கான தரநிலை.
2. MPEG-2 : இலக்க தொலைக்காட்சி செட்டாப் பெட்டி மற்றும் DVD களை ஆதரிக்கும் தரநிலை.
3. MPEG-3: பல்லூடகம் மற்றும் கைப்பேசி வலைக்கான தரநிலையாகும்.
4. MPEG-7 : ஒலி மற்றும் ஒளி பொருளடக்கத்தைத் தேடுவதற்கான தரநிலையாகும்.
5. 2000ல் MPEG-21 : பல்லூடாகக் கட்டமைப்பு பற்றிய ஆய்வைத் தொடங்கியது.

QB365 Study Material
QUESTION BANK 365

ஏதேனும் 6 வினாக்களுக்கு விடையளி

11. பல்லூடகம் என்பது உரை, நிழற்படம், அசைவுப் படம், ஒலி, ஒளிக்காட்சிகள் ஆகிய ஐந்து முக்கியக் கூறுகளைக் கொண்டுள்ளது.
12. (i) நிலையான உரை (Static text)
(ii) மீ உரை (Hypertext)
13. 1. பிட் மேப் (அ) செவ்வக படம்.
2. வெக்டர் படங்கள்
14. BMP (Bitmap) :
1.தொடக்கத்தில் இந்த வடிவமானது விண்டோஸ் 3.1ல் பயன்படுத்தப்பட்டது.
2. மிகவும் பெரியது மற்றும் சுருக்கமற்றது.
3. எனவே, அதிக தெளிவுத்திறன் (அ) பெரிய நிழற்படங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது.
(ii) DIB (Device Independent Bitmap) :
1. இந்த வடிவம் BMP-யை ஒத்தாகும்.
2. கோப்புகளை பல்வேறு சாதனங்களில் காண்பிக்க அனுமதிக்கிறது.
15. GIF (Graphics Interchange Format) :
1. பெரும்பாலான கணினி வண்ண நிழற்படங்கள் மற்றும் பின்னணிகள் GIF கோப்புகளாகும்.
2. குறைந்த அளவு வண்ணங்களைப் பயன்படுத்தும் வரைகலைக்கு இந்த கோப்பு வடிவம் மிகச்சிறந்த பொருத்தமாகும்.
3. நிகழ்நிலை வண்ண புகைப்படங்களில் பயன்படுத்தப்படும் மிகவும் பிரபலமான வடிவமாகும்.
4. வண்ண மதிப்பை அடையாளம் காண்பதற்கு 8 பிட் வண்ணத் தேடல் அட்டவணையைப் பயன்படுத்துகிறது,
16. பல்லூடகம் (Multimedia) என்னும் சொல் 'பல' (Multi) மற்றும் 'ஊடகம்' (Media) என இரண்டு சொற்களை உள்ளடக்கியது.
பல்லூடகம் என்பது உரை, நிழற்படம், அசைவுப் படம், ஒலி, ஒளிக்காட்சிகள் ஆகிய கூறுகள் அடங்கிய கணிப்பொறி தழுவிய ஒரு வழங்கு முறையாகும்.
17. அசையா படங்களை மிக விரைவாக காண்பிப்பதன் மூலம் அவற்றைத் தொடர்ச்சியான அசைவு போன்ற உணர்வை கொடுக்கும் செயலே அசைவூட்டல் ஆகும்.

Multiple Choice Question

18. (d) தகவல் வழங்குவதற்கு பல வகையான ஊடகங்களைப் பயன்படுத்துதல்
19. (a) பல்லூடகம்
20. (a) பிக்செல்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட படம்
21. (b) வடிவியல் வடிவங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட படம்
22. (a) JPEG
23. (c) EPS
24. (b) Microsoft
25. (a) Joint Photographic Experts Group

26. (c) Apple Inc.
27. (a) MP3

QB 365 Study Material
QUESTION BANK 365